04 DEC 20
Eastern University, S

# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE & MANAGEMENT
# EXTERNAL DEGREES
# FIRST EXAMINATION IN BBA/COM – 2002/2003 (REPEAT)(june/july 2009)

## BBA/COM 101 Micro Economics

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக. நேரம் : 03 மணி

01. (அ) சமநோக்கு கோடுகளின் பிரதான இயல்புகள் எவை? வரைபடங்களுடன் விளக்குக

(08 புள்ளிகள்)

(ஆ) சமநோக்குக் கோட்டாய்வில் நுகர்வோன் சமநிலையை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

02. (அ) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டையும், நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டையும் வேறுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(ஆ) குறைந்து செல்லும் எல்லை உற்பத்தி விதியினை உதாரணங்களுடன் விளக்குக

(12 புள்ளிகள்)

03. (அ) நிலையான செலவுகளையும் மாறும் செலவுகளையும் உதாரணம் காட்டி வேறுபடுத்துக.

(12 புள்ளிகள்)

(ஆ) நவீன செலவுக் கோட்பாட்டின்படி நீண்டகாலச் செலவுக் கோடுகள் ஏன் "L" வடிவில் அமைந்திருக்கின்றன.

(08 புள்ளிகள்)

04. (அ) நிறைபோட்டியின் பிரதான இயல்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நிறைபோட்டி உற்பத்தியாளன் குறுங்காலத்தில் தனது உற்பத்தியைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது நிறுத்துவதா என்பதைத் தீர்மானிப்பதில் தனது நிறுவனத்தின் சராசரி மாறும் செலவை (AVC) கருத்தில் கொள்வான்" இக்கூற்றை விளக்குக.

(12 புள்ளிகள்)

(05) (அ) ஒரு தொழிலானது எவ்வாறு ஒரு தனியுரிமை அமைப்பாக மாறுகின்றது?

(04 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமையில் விலை பேதப்படுத்தல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகள் எவை?

(08 புள்ளிகள்)

(இ) விலை பேதப்படுத்தலின்போது தனியுரிமையாளனால் கடைப்பிடிக்கப்படும் மூன்று வேறுபட்ட நிலைகளை உதாரணம் தந்து விளக்குக.

(08 புள்ளிகள்)

06. (அ) தனியுரிமைப் போட்டியானது தனியுரிமையில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

(08 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமைப் போட்டியில் 'பொருள் வேறுபடுத்தல்' என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

07. (அ) சிலருரிமை அமைப்பின் பிரதான இயல்புகள் எவை? நடைமுறை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) முறிந்த கேள்விக் கோடானது எவ்வாறு ஒரு சிலருரிமை நிறுவனத்தின் தந்திரோபாய நடத்தையைக் காட்டுகின்றது?

(12 புள்ளிகள்)

08. சுருக்கமாக விளக்குக.

(அ) சுராசரி செலவுக்கோடு

(ஆ) சம உற்பத்திக் கோடுகள்

(இ) அசாதாரண இலாபம்

(20 புள்ளிகள்)

************************